**<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>**

**<u>நகர்மன்றக்கூட்டம்</u>**

**<u>நாள். 30.04.2020 வியாழக்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>**

## <u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 30.04.2020</u>

**<u>மன்றப்பொருள்:1</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் IEC நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும், அவசர அவசியம் கருதியும் தலைமை செயலாளர், நிதி மறறும் படிகள் துறை அவர்களின் கடிதம் எண். 74/JS(MA)1 Finance (Salaries) 2020 நாள். 01.04.2020—ல் ஒப்பந்தப்புள்ளி கோர விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் எற்கனவே இந்நகராட்சிக்கு பாதுகாப்பு பொருட்கள் விநியோகம் செய்த M.D. Spl 204 Chellampatty Agro Engineering and Service Co-operative Centre Ltd நிறுவனத்திடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பொருட்கள் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.567/2020/எச்.2

---

**<u>மன்றப்பொருள்:2</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி சோடியம் ஹைப்போ குளோரைடு கிருமி நாசினி LCV வாகனம் மூலம் தெளிக்க மருந்து தெளிப்பான் HPP Sprayer 2 எண்ணம் மற்றும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மருந்து டேங்க் வாங்கவும் அவசர அவசியம் கருதியும் தலைமை செயலாளர் நிதி மற்றும் படிகள் துறை அவர்களின் கடிதம் எண். 74/JS(MS) finance /2020 நாள். 01.04.2020—ன்படி ஒப்பந்தப்புள்ளி கோர விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே, இந்நகராட்சிக்கு பாதுகாப்பு பொருட்கள் விநியோகம் செய்த M.D.Spl 204 Chellampatti Agro Engineering and service co-operative centre Ltd., நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பொருட்கள் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். /2020/எச்.2

---

**<u>மன்றப்பொருள்:3</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வாக்குச்சாவடிகளின் புகைப்படம் எடுத்த செலவினம், கொரோனா (COVID-19) நோய் தடுப்பு நடவடிக்கை சம்பந்தமான போட்டோ மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு பணி அடையாள அட்டை வழங்கியதற்கு ரூ. 22,670/– யை திரு. என்.நாகராஜ் என்பவருக்கு வழங்குவதை மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:4</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் COVID-19 கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், மதுரை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரையின்படியும் இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள், SBM பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தினம் தோறும் முக உறை வழங்க 3000 எண்ணம் M/s. E Bags Palladam, நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், முழு கவச உறை (PPE KIT) 250 எண்ணம் M/s. ABHINAV Fabrics Karur நிறுவனத்திடமிருநூது கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்தொகைக்கும் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பொருட்கள் வாங்கியதையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 567/2020/எச்.2)

---

**<u>மன்றப்பொருள்:5</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தொடர்பாக நகராட்சி வாகனங்கள் ( 7 எண்ணம்) மூலம் பிரச்சாரம் செய்ய பிரச்சார பேனர்கள் வாகனங்களின் முன்புறம் மற்றும் Side பகுதிகளில் வைக்கவும், கொரோனா தொற்று ஏற்பட்ட வார்டு–13–ல் உள்ள கட்டுப்பாட்டு அறை முன் சி.சி.டிவி கேமரா பேனர், Help Desk பேனர் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்ட பேனர் என மொத்தம் 19 பேனர்கள் வைக்கவும், வாகனங்கள் மற்றும் அம்மா உணவகத்தில் ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்க 4GB Pendrive 8 எண்ணம் மற்றும் கட்டுப்பாட்டு அறைக்கு Airtel Sim Card 1 எண்ணம் வாங்கவும், பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் M/s. சன் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரஸ் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 14000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 648/2020/எச்.2

**மன்றப்பொருள்:6**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13–ல் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால் நகரின் அனைத்து பகுதிகளில் சுண்ணாம்பு தூள், பிளீச்சிங் பவுடர் கரைசல் தெளிக்கவும் மெக்கானிக்கல் ஸ்பிரேயர் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு ஒருமுறை பயன்படுத்தவும் கை உறை போன்றவை வாங்கவும் அவசர அவசியம் கருதி தலைமை செயலாளர், நிதி மற்றும் படிகள் துறை அவர்களின் கடித எண். 74/JS(MA) Finance 2020 நாள். 01.04.2020–இல் ஒப்பந்தப்புள்ளி கோர விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே இந்நகராட்சிக்கு பாதுகாப்பு பொருட்கள் விநியோகம் செய்ய M/s. M.D. (Spl) 204 Chellampatti Agro Engineering and Service Co-operative Centre Ltd, நிறுவனத்திடமிருந்து பிரிவு 15–ன்கீழ் கொள்முதல் அதற்கான உத்தேச செலவினத்தொகைக்குரிய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் கொள்முதல் செய்ததையும், அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 567/2020/எச்.2

---

**மன்றப்பொருள்:7**

உசிலம்பட்டி நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று (COVID-19) நோய் பரவாமல் தடுக்க, கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இதர பணிகள் செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டு. மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு–13, எஸ்.ஒ.ஆர். மற்றும் நகர்நல மையத்தில் கொட்டகை அமைத்தல் | 19,000 |
| 2 | வார்டு–13, எஸ்.ஒ.ஆர்.நகரில் பொதுமக்களை கண்காணிக்க சி.சி.டிவி கேமரா பொருத்துதல் | 60,000 |
| 3 | நகராட்சி அருகில் சத்திரம் பள்ளியில் சாமியானா பந்தல் அமைக்கும் பணி | 22,000 |
| 4 | வார்டு–13, எஸ்.ஒ.ஆர். நகரில் அலுமினிய தகரம் அமைத்தல் பணி | 1,75,000 |
| 5 | அம்மா உணவகம் கை கழிவும் தொட்டி 1 எண்ணம் அமைத்தல் பணி | 55,000 |
| 6 | வார்டு–24 கவண்டன்பட்டி அம்பேத்கர் நகரில் செப்டிக் டேங்கி சுத்தம் செய்யும் பணி | 60,000 |
| 7 | வார்டு–13,14,16,17,18 உள்ள பிரதான தெருக்களில் அலுமினிய தகரம் அமைத்தல் பணி | 90,000 |

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணிமேற்கொண்டதைதயும் மன்றம் ஏற்கலாம்.

3). ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**மன்றப்பொருள்:8**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண். டி.என்.58, ஏ.டபுள்யூ.2747 வாகனத்தின் டீசல் பில்டர் புதிதாக மாற்றுவது பிரேக் பெடல் சர்வீஸ், சென்சார் செக்கப், பிரேக் ஆயில் மற்றும் லைனிங் மாற்றுவது ஆகிய பழுது நீக்கம் நியூ கோயம்புத்தூர் ஆட்டோ கேரேஜ் அவர்களிடம் பழுது நீக்கம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 4,850/– (ரூபாய் நான்காயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) திரு. பி.சின்னச்சாமி, ஓட்டுநர் தனது சொந்த செலவில் செலவு மேற்கொண்டுள்ளார். எனவே, அதற்கான பில் தொகை ரூ. 4,850/–ஐ திரு. பி.சின்னச்சாமி ஓட்டுநர் அவர்கள் பெயருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).வாகனத்தின் அவசர அவசியம் கருதி பழுது பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2887/2013/எச்.1)

---

**மன்றப்பொருள்:9**

கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தேவைப்படும் Mask, Gloves, PPE Kit மற்றும் கிருமிநாசினி சோடியம் ஹைபோகுளோரைடு, லைசால் திரவம் போன்றவை பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. Reliant Global Green energy and Co, Coimbatore நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை ரூ. 99,728/– வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பொருட்கள் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 666/2020/எச்.2)

---

**மன்றப்பொருள்:10**

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு வாகனத்திற்கு தினசரி குறிப்பு எழுதுவதற்கு லாக் புக் தீர்ந்து விட்டதால், தினசரி குறிப்பு எழுவதற்கு லாக் புக் 50 எண்ணிக்கை வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 10,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2). லாக் புத்தகத்தின் அவசர அவசியம் கருதி புத்தகம் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்:11</u>**

கோவிட்–19 கொரோனா வைரஸ் காய்ச்சல் காரணமாக 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களின் அறிவுறுத்தலபடியும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், DBC பணியாளர்கள் மற்றும் இதர சுகாதார பணியாளர்களுக்கு 19 நாட்களுக்கு 1.4.2020 முதல் 19.4.2020 வரை திட உணவுகள் (பால் 2 கப், பயறு வகை 100 கி., வாழைப்பழம் 2 எண்ணம் தினந்தோறும் வழங்க அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. Er.C.சுதாகர் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கியதையும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 1,25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பணிகள் மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2020/எச்.2)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.